[29th March 1961

பெயர் வந்தது. சாத்துக்குடி பயிராகக்கூடிய நிலத்தின் அளவு குறைந்து வருகிறதே, அதை மேலும் அபிவிருத்தி செய்ய சர்க்கார் என்ன முயற்சி எடுத்துககொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நவாப் காலத்திலிருந்து வருகிறதோ அல்லது முன்னேயிருந்து வருகிறதோ தெரியாது. அதிகப்படுத்தத்தான் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : From the statement placed on the table of the House, we find that only in 5 acres, other fresh fruit trees have been planted in the North Arcot district. May I know the reason for planting these trees only in a small extent of land, viz., 5 acres?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆங்காங்கு உள்ள மக்கள்—வட ஆற்காடு மாவட்ட மக்கள்—அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் இதிலிருந்து விளங்குகிறது.

SRI S. M. ANNAMALAI : ஸார், நம் நாட்டு மாம்பழத்திற்கு வெளி நாடுகளில் நல்ல கிராக்கி இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, வெளி நாடுகளிலிருக்கிற வெள்ளையர்கள் கூடமாம்பழத்தை விரும்பிச் சாப்பிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அதனுல் இதை மேலும் ஏற்றுமதி செய்ய சர்க்கார் என்ன முயற்சிகள் எடுத்துக் கொணடிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வெளி நாடுகளில் மாம்பழம் உண்மையில் விரும்பப்படுகிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமானுல் போதிய அளவு மாம்பழ உற்பத்தி பெருக வேண்டும். இங்கே உள்ளவர்களும் சாப்பிட வேண்டும். ஆகவே நம் தேவைக்கும் அதிகமாக உற்பத்தி செய்ய முதலில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : இங்கே வைத்திருக்கிற ஸ்டேட்மெண்ட்படி சேலம் ஜில்லாவிலும், வட ஆற்காடு ஜில்லாவிலும் மாம்பழத் தோட்டம் அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே மாம் பழம் கிடைக்காத காலத்தில் கூடபழங்களைப் பதனப்படுத்தி சாப்பிடக்கூடிய அளவுக்கு, அதற்கான தொழிற்சாலைகளை இந்த இரண்டு ஜில்லாக்களிலும் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழிற்சாலை அமைப்பது வேறு விஷயம். அதிலும் கவனம் செலுத்தப்படும். ஆனுல் மாம்பழம் காய்க்காத, பழுக்காத காலத்தில்கூட வேண்டுமென்ருல் பழைய மாம்பழத்தை வைத்துக்கொள்வதில் பிரயோசனம் இல்லை. கன்னியாகுமரியில் ஆராய்ச்சி நடக்கிறது. வேறு இடங்களிலும் இது தொடரப்பட்டு வருகிறது. எல்லாக் காலங்களிலும் மாம்பழம் கிடைக்கும் முறையில் செடிகள் வைத்து வளர்க்கப்படுகின்றன.

SRI T. S. RAMASWAMY : "ஆஃப் ஸீஸன் மாங்கோஸ்" கன்னியாகுமரியில் கிடைப்பது போல எல்லா ஜில்லாக்களிலும் கிடைக்க ஆங்காங்கே பயிர் செய்ய முடியுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கன்னியாகுமரியில் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. மேலும் ஆராய்ச்சி செய்து வேறு எந்தெந்த இடத்தில் இதை வளர்க்கலாம் என்பது கவனிக்கப்படும்.

Import of contraband goods

* 1157 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் அயல் நாடுகளிலிருந்து நம் மாநிலத்தில் விற்பனைக்காக கள்ளத்தனமாய் இறக்குமதி செய்யப்பட்ட சாமான்கள் சம்பந்தமாய் எத்தனை வழக்குகள நம் மாநிலப் போலீஸாரால் பதிவு செய்யப்பட்டன ?

29th March 1961]

(இ) அச் சாமான்களின் விவரமென்ன ?

(உ) அவைகளின் விலை மதிப்பென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement* is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : ஸார், மேஜை மீது வைக்கப் பட்டிருக்கும் குறிப்பிலே கண்டுள்ள சாமான்களை கள்ளத்தனமாக இறக்குமதி செய்ததற்கும், விற்பனை செய்ததற்கும் எத்தனை பேர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன ? எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மொத்தம் 36 கேஸ்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

SRI A. A. RASHEED : May I know how these contraband goods were disposed of and what were the proceeds of such sale?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : They can be disposed of only when the cases are disposed of.

SRI A. VEDARATHNAM : எங்கள் பகுதியிலிருந்து, தஞ்சை கடற்கரை ஓரத்திலிருந்து 25, 26 மைலில் இலங்கை இருப்பதால் அந்தப் பகுதியில் கள்ளக்கடத்தல் மிக அதிகமாக இருக்கிறது. பத்துத் தரம் ஸ்மக்கிள் செய்தால் ஒரு தரம் அகப்படுவது என்ற ஏற்பாட்டின் பேரில் நடப்பதாகக் கூறப்படுகிறது. ஸ்மக்கிளர்ஸ் எல்லாரிலும் "நொட்டோரியஸ்" என்ற விதத்தில் சர்க்காரிடத்தில் ஜாபிதா இருக்கிறது. அவர்களைக் கண்காணித்து இம்மாதிரி நடக்காமல் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயத்திலே என்னென்ன வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடுமோ அந்த வகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டம் பற்றிச் சொன்னார்கள்—அவர்களுடைய பகுதியைப் பற்றி. அநேகமாக அந்தப் பிராந்தியங்களிலிருந்து 1,624 கை கடிகாரங்கள் கூட பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது.

SRI T. T. DANIEL : From the statement placed on the table of the House, we find that the quantity of camphor that is illicitly imported into our State appears to be very great. May I know the reason for it and how that particular article alone is being illicitly imported into this State in such large quantities?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The explanations is that people here are very much devoted and they go to temple and they use camphor. Camphor is in short supply and therefore, there is considerable smuggling of camphor from Ceylon and other countries.

SRI P. G. MANICKAM : எந்தெந்த நாடுகளிலிருந்து கள்ளத்தனமாக சரக்குகள் நம் நாட்டுச்குள் இறக்குமதி ஆகிறது என்ற புள்ளி விவரங்கள் சர்க்காரிடத்தில் இருப்பின் அவற்றை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்தெந்த நாடுகளிலிருந்து வருகிறது என்று நாம் எல்லாம் ஆராய்ந்து சொல்ல புள்ளி விவரங்கள் இல்லை. கள்ளக்கடத்தல் என்பது பல நாடுகளில் நடக்கிறது. நான் கூடப் பார்த்திருக்கிறேன். மற்ற நாடுகளில் கூட கடலோரங்களில் ரிஸ்ட் வாட்ச், பவுண்டன் பென் முதலியவைகள் விற்கப் படுவதைப் பார்த்திருக்கிறேன். பல நாடுகளிலிருந்து வந்து, ஒரு நாட்டிலிருந்து ஒரு நாட்டுக்கு வந்து, சிலோனுக்கு அம் மாதிரி வந்து இங்கே வரலாம்.

* Printed as Appendix IV on page 411 infra.

SRI V. K. KOTHANDARAMAN : பிடிபட்டுள்ளது மாத்திரம் 6,52,125 ரூபாய் சரகசு பிடிபடாதது எத்தனை லட்சமோ ? சொல்ல முடியாது. கள்ளக்கடத்தலால் ரொம்பக் குறைந்த விலையில் சாமான்கள் கிடைக்கும் நிலைமை இருப்பதால்தான் அந்த நிலைமை. குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடிய சாமான்களை நம் சர்க்காரே இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் அளவிற்கு ஏற்பாடு செய்தால் இது போன்ற நிலைமை ஏற்படாது என்பதை சர்க்கார் உணருகிறார்களா ? அப்படி யானால் அதைச் செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத் தினர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இதிலே கஸ்டம்ஸ், எக்ஸைஸ் எல்லாம் இருக்கிறது. எதை ஏற்றுமதி செய்தாலும் கஸ்டம்ஸ் வரி எக்ஸைஸ் வரி போட்டு, அதையும் அதன் விலையோடு சேர்த்து விறக படுகிறது. கஸ்டம்ஸை ஏமாற்றி, எக்ஸைஸ் வரியை ஏமாற்றி சுலபமாக லாபம் சம்பாதிக்க இது நடத்தப்படுகிறது. அப்படி கஸ்டம்ஸ் வரியை ஏமாற்றி நாம் குறைந்த விலையில் திருட்டுத்தனமாக வாங்க வேண்டும் என்ற மனப்பான்மை இருக்கிறது. வாங்குகிறவர்கள் தயாராக இல்லாம லிருந்தால் இந்தக் கள்ளக்கடத்தல் இருக்காது. அவைகளை வாங்குவதால் தான இந்தக் கள்ளக்கடத்தல் இருக்கிறது.

SRI S. RANGANATHA MUDALIAR : Sir, it is understandable if smuggled goods are seized in sea-coast towns but it is not understandable how smuggled goods travel so far into the interior places like Madurai and Salem?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is quite possible and probable that certain smuggled goods from Ceylon are brought by sea through illicit traffic and then they are carried away illicitly to certain towns and certain centres. The Police are trying to trace it. They trace it at a later stage and thus they catch them at various towns and places.

SRI A. VEDARATHNAM : ஸார், இந்தக் கள்ளக்கடத்தல் காரர்களைப் பிடிப்பதற்காக கடலில் ஸ்டீம் லான்சுகள் முன்பு வைக்கப் பட்டிருந்தன. அவை ஏன் இப்போது எடுக்கப்பட்டுவிட்டது ? அவை இப்போது இல்லாத காரணத்தினால் கள்ளக்கடத்தலில் நல்ல அபி விருத்தி ஏற்பட்டு, பணம் வருகின்ற காரணத்தினால் மக்களுடைய வாழ்க் கையில் டீ-மாரலிசேஷன் நிலைமை ஏற்படுகிறதே, அதைத் தடுக்க வேண்டி யது அரசாங்கத்தின் முக்கிய கடமை அல்லவா ? அந்தத் துறையிலே என்ன முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதெல் லாம் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு என்று. அவர்களுடைய இலாகா தான் இவைகளை கவனித்துக்கொண்டு வருகிறது. அதோடு இந்த அரசாங் கத்தின போலீஸ் இலாகாவும் கவனித்து என்னென்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்துகொண்டு வருகிறது. ஆகவே இதற்குமேல் ஏதாவது வேண்டுமென்றால் அந்தக் கேள்வியைப் பார்லிமெண்டில் கேட்க வேண்டும்.

Kallanai-Anikkarachattiram Road (metalling)

*1158 *Q.*—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கல்லணையிலிருந்து கொள்ளிடம் தெற்குக் கரையில் ஆணிக்காரச் சத்திரம் வரையில் சாலைக்குக் கப்பிபோட உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் எப்போது அவ் வேலை ஆரம்பிக்கப்படும் ?